
# தமிழ் முரசு

முரசு:1 | TAMOUL MOURASSOU | ஒலி:10



1983 Peter Brookes நன்றி: THE TIMES. ஆவணி

கொடுதலி! கொடுமலி! விடுதலி குமிழ்க்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு

தமிழ்முரசு-22

## ஐக்கியம்.....ஏற்படுமா...?

ஈழத் தமிழ் மக்களின் இன்றைய நிலைபற்றி விபரிக்க வேண்டிய அவசியமே இல்லை. என்ன நடந்தது... எங்கு நடந்தது... எப்படி நடந்தது... என்ற ஆராய்வுகளுக்கும் இது நேரமல்ல. உலகெங்கணும் வாழுகின்ற... வாழ்வுடன் போராடுகின்ற நெருக்கப்படும் மக்களுக்கெதிராக ஏகாதிபத்தியமும் அதன் எடுபிடிகளும் மேற்கொண்டுவரும் அராஜக அடக்குமுறைகள் இம்முறை எம் மக்களின் மீது எதிரொலித்திருக்கின்றன. விளைவு... வீதியோரங்களிலெல்லாம் எம் மக்களின் பிணக்குவியல்... வீடுகளை இழந்து அநாதைகளாக... அகதிகளாக இலட்சத்துக்கும் மேற்பட்ட எம் மக்கள்... இனிமேல் ஈழத்தில் இவர்களது வாழ்க்கையை நிரந்தரமாக்க வேண்டிய பெரும் பணி. இந்நிலையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களின் மீது பாரிய கடமைகள் சுமத்தப்படுகின்றன.

மக்கள் விடுதலைப் போரின் பங்குகொள்ளும் காலகட்டத்தை நெருங்கிவிட்டார்கள்... இழப்பதற்கு இனிமேல் எதுவுமில்லை என்ற நிலையை அடைந்துவிட்டார்கள். இனிமேல் அவர்களது சக்தியை விடுதலைப் போராட்டத்திற்கு உபயோகிக்க வேண்டியது இயக்கங்களின் முதற்பணி. தமிழீழத்திற்கு அகதிகளாக வந்துவிட்ட இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்களின் எதிர்கால வாழ்க்கை குறித்த திட்டங்களையும் எதிர்வரும் காலங்களில் சிறீலங்கா அரசாங்கம் தமிழ்மக்களின் மீது சுமத்தவிருக்கும் பொருளாதாரப் பழுவிலிருந்து எம்மக்களை மீட்பதற்கான திட்டங்களையும் புத்திஜீவிகளின் கூட்டிணைப்பின் மூலம் வகுப்பது அடுத்தபணி. அடுத்தது ஆக்கிரமிப்பு அரசபடைகளால் எம்மக்களுக்கு ஏற்படும் அழிவுகளிலிருந்து எம்மக்களைப் பாதுகாக்க சக்தி வாய்ந்த பாதுகாப்பு இராணுவத்தை அமைப்பதுவும், தமிழீழப் பிரச்சினை என்பது தமிழ்மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை மாத்திரமல்ல அது ஓர் சர்வதேசப் பிரச்சினை என்பதை உலகுக்கு வெளிக்காட்டி சர்வதேசியத் தொடர்புகளை ஏற்படுத்துவதும் இயக்கங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் முக்கியபணிகளாகும். இதுபோல இன்னும் எத்தனையோ கடமைகள் இன்று தமிழீழ இயக்கங்களுக்கு இருக்கின்றன.

இந்தப் பணிகளை தனிப்பட்ட எந்த ஒரு இயக்கம் தான் சாதிக்கமுடியுமா என்றால் அதற்குப் பதில் முடியாது என்பதேயாகும். இந்தப்பணிகளை செய்து முடிக்க வேண்டுமென்றால் தமிழீழ விடுதலை இயக்கங்களிடையே ஒரு ஐக்கியம் ஏற்படவேண்டும். ஐக்கியம் என்பது ஒரு இரவிலோ அன்றி ஒரு பகலிலோ ஏற்படமுடியாது என்பதையும், முரண்பாடுடைய கொள்கைகளைக் கொண்ட இயக்கங்கள் ஒன்றிணைவது சாத்தியமற்றது அப்படி இணைந்தாலும் அது நிரந்தரமற்றது என்பதை நாம் அறிவோம்

ஆனால் இன்றைய காலகட்டம்... எம்மக்களின் இன்றைய நிலை.... அதிகரித்துவரும் ஆக்கிரமிப்பு அரசின் அட்டூழியங்கள் இவையெல்லாம் நமக்கு காட்டுவது ஒன்றைத்தான். இன்று தமிழீழ இயக்கங்களின் மீது சுமத்தப்பட்டிருக்கும் பணிகளின் அடிப்படையில்... தமிழ்மக்களின் எதிர்காலம் குறித்த கேள்விக்கு பதில்தரும் வகையில்.... ஈழவிடுதலைப் போராட்டத்தை சர்வதேசப் பிரச்சினையாக்க வேண்டிய இந்தக் காலகட்டத்தை பயன்படுத்த வேண்டியவகையில்... அனைத்துக்கும் மேலாக சக்திவாய்ந்த தமிழீழப் பாதுகாப்பு இராணுவத்தை உருவாக்க வேண்டிய அவசியத்தை செயலாக்க வேண்டிய வகையில் தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஒரு பொதுவேலைத்திட்டத்தின் கீழ் ஐக்கியப்பட்டு ஒரு தமிழீழ சொலிடாரிற்றி அமைப்பைத் தோற்றுவிப்பது அவசியமாகிறது. இத்தகைய அமைப்பு உருவாக்கத்திற்கு தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்) தனது பூரணமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருக்கிறது. தமிழீழ விடுதலையையும்... தமிழ் மக்களின் நலனையும் மாத்திரம் கருத்தில் கொண்ட இயக்கங்கள் இத்தகைய அமைப்பை உருவாக்கி தமிழீழ விடுதலையை விரைவில் வென்றெடுக்க வகை செய்யும் என நம்பிக்கை வைக்கிறோம்.

- காந்தன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழக செய்திகள்

## ● அரச பயங்கரவாதத்துக்குப் பலி ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள்!

திட்டமிட்டபடி சிறீலங்கா அரசாங்கம் தமிழ்மக்கள்மீது கட்டவிழ்த்துவிட்ட அரசபயங்கரவாதம் ஆயிரக்கணக்கான தமிழ்மக்களின் உயிர்களைப் பலி வாங்கியுள்ளது. சிறீலங்காவின் பேரினவாதக் காடையர்களும் அரசபடையினரும் கொலைசெய்த தமிழ் மக்களின் எண்ணிக்கை - தமிழீழத்துக்கு வெளியே மட்டும் - இரண்டாயிரத்துக்கும் அதிகம் என்று கருதப்படுகிறது. அரச அறிக்கை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 400 என்றே இன்னும் கூறிவரும்போதும் ஈழத்திலிருந்து வந்த செய்திகளும் சர்வதேச பத்திரிகையாளர்களது அறிக்கைகளும் அரச தகவல் பொய் யாக்கின்றன.

## ● அகதிகளாக... அநாதைகளாக இலட்சக்கணக்கான தமிழ் மக்கள்!

சிறீலங்கா அரசபயங்கரவாதம் கொழும்பிலும் அதை அண்மித்த பகுதிகளிலும் வாழ்ந்த ஒரு இலட்சத்துக்கும் மேலான தமிழ்மக்களின் உடைமைகளை சூறையாடி... தீ வைத்து நாசமாக்கி... அவர்களை இருப்பிடம் இல்லாதவர்களாக்கி அகதிகளாக்கியுள்ளது. அரச அடியாட்களால் தமிழ் மக்கள் தாக்கப்பட்ட போதும் அவர்களுடைய சொத்துக்கள் சூறையாடப்பட்ட போதும் அரசபடைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தப் பாதுகாப்பையும் தராமல் காடையர்களுக்குத் துணைநின்று செயலை இலங்கைக்குச் சென்ற உல்லாசப் பிரயாணிகள் அம்பலப்படுத்தியுள்ளனர். கோடிக்கணக்கான ரூபா பெறுமதிவாய்ந்த தமிழ் மக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டும் நாசமாக்கப்பட்டும் உள்ளன. தமிழ் மக்களுக்குப் பெரும் பொருளாதாரப் பாதிப்பு ஏற்படவேண்டும் என்ற தனது நீண்டகால நோக்கை அரசு இச் செயல் மூலம் பூர்த்தியாக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நகரில் நடந்தது என்ன?

சர்வதேசரீதியாக முதலாளித்துவ வெளிநாட்டுப் பத்திரிகைகளின் மூலமாக தீவிரவாத தமிழ் இளைஞர்களின் தாக்குதலே நடைபெற்ற அசம்பாவிதங்களுக்குக் காரணம் என்று பொய் பிரச்சாரம் செய்துவருவதை ஈழத்துச் செய்திகளும் நியூயோர்க்கிலிருந்து வெளிவரும் WORKERS VANGURD - 29 ஜூலை - 1983 இதழும் அம்பலப்படுத்தியுள்ளன. மூன்று தமிழ்ப் பெண்கள் சிறீலங்கா இராணுவத்தினரால் இழுத்துச் செல்லப்பட்டு கற்பழிக்கப்பட்டதையும், அதில் ஒரு பெண் தற்கொலை செய்துவிட்டதையும் சிறீலங்கா அரசு மறைத்துவிட்டது. இச்சம்பவத்தின் பின்னரே ஆத்திரமடைந்த தீவிரவாத இளைஞர் ஜூலை 23ம் திகதி ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் 13 பேரை குண்டுவீசி கொலை செய்தனர்.

இதையடுத்து இராணுவம் மேற்கொண்ட வெறியாட்டத்தில் ..... பலியானவர்களின் எண்ணிக்கை நூறை அண்மித்தது. வீடுகளில் புகுந்து இராணுவம் இளைஞர்களை சுட்டுத் தள்ளியது. சங்கானையில் இருவரும் பண்டத்தரிப்பில் இருவரும் மானிப்பாயில் 9 பேரும் - இதில் 6 பேர் பள்ளிச் சிறுவர்கள் - கோண்டாவிலில் - இதில் ஒரு சிறுவன் - இருவரும், திருநெல்வேலியில் இருவரும் - இதில் ஒருவரின் வயது 83 - மேலும் பல இடங்களில் பலரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் கொலைகளை சிறீலங்கா இராணுவமே நிகழ்த்தியதாக தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் அமிர்தலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார். அரச வட்டாரங்களும் இதை ஏற்றுள்ளபோதும் இதற்கெதிராக எந்த வழக்கையும் எடுக்காதது அரச அநுசரணை இச்சம்பவத்திற்கு இருந்ததை தெளிவாக்குகிறது.

## திருமலையில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட கதி!

ஏற்கனவே திட்டமிட்டபடி சிறீலங்கா அரசபடையினரும் பேரினவாதக் காடையர்களும் நிகழ்த்திய தாக்குதல்களால் உயிர், உடமை இழப்புகட்கு உள்ளாகி பாதிக்கப்பட்டிருந்த திருமலை வாழ் தமிழ் மக்களின்மீது திடீரென சிறீலங்காவின் கடற்படையினர் நிகழ்த்திய மிருகத்தனமான தாக்குதல் பெருத்த உயிர், உடமைச் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. திருமலையில் ஏற்பட்ட பேரழிவுகள் குறித்த முழு விபரங்களும் இன்னும் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மக்களுக்கு தார்மீகம் தரும் பரிசு என்றும் அழிவு தானா...! கொழும்பிலே நடந்த அவலங்கள்.

யூலை 24ம் திகதி கொழும்பிலே தமிழ் மக்களுக்கெதிரான தாக்குதல்கள் ஆரம்பமாகின. அரசபடையினரின் துணையுடன் ஆளும் கட்சிக் குண்டர்கள் தமிழர் வீடுகளை, கடைகளை, தொழிற்சாலைகளை கொள்ளையடித்தும், தீவைத்தும் துவம்சம் செய்தனர். தமது சகல உடைமைகளையும் இழந்த இலட்சத்தை அண்மித்த எண்ணிக்கையுள்ள தமிழ்மக்கள் பத்துக்குமேற்பட்ட அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். அரச காடையினரின் தாக்குதலுக்கு தமிழர் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரத்தின் வீடு இலக்காகி முற்றாகச் சேதப்படுத்தப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு பாதுகாப்பு மறுக்கப்பட்டது. இ.தொ.கா. அமைச்சரவை உறுப்பினராகிய தொண்டமானின் இ.தொ.கா. காரியாலயம் நாசமாக்கப்பட்டது. ஐ.தே.க. அரசாங்கத்துக்கு சார்பானவர்களும் பிரபல வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களுமான ஞானம், மகாராஜா போன்றோர்களின் உடைமைகள் யாவும் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளன.

## அகதிகள் முகாம்களில் தமிழ்மக்கள் பட்ட அவலம்!

பேரினவாதக் காடையர்களிடமிருந்து உயிர்களைக் காப்பாற்ற அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ்மக்கள் பட்ட அவலங்களை வார்த்தைகளில் கூற முடியாது. அவர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. உணவு அளிக்கப்படவில்லை. 10 ஆயிரம் அகதிகளுக்கு இரண்டு மலகூடங்களும் இரு குழாய்களுமே இருந்தது. உணவின்மை, சுகாதாரச் சீர்கேடு, பயம் என்பவற்றிலே சிக்கித் தவித்த தமிழ்மக்களை தமிழீழத்துக்கு அனுப்பவோ அன்றி அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை அளிக்கவோ அரசாங்கம் முன்வராமல் பணயக் கைதிகளாக வைத்து தனது பயங்கரவாதத்தை தொடர்ந்து கண்டி, மாத்தளை, காலி, நாவலப்பிட்டி, போன்ற பலபகுதிகளில் வாழும் தமிழ்மக்கள் மீதும் கட்டவிழ்த்து விட்டது. இறுதியில் இந்திய அரசாங்கத்தின் தலையீட்டில் தமிழ் அகதிகளை தமிழீழத்துக்கு கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்க வழிகோலியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களை சிறீலங்கா அரசு பழிவாங்குகிறது!

பயங்கரவாதச் செயல்களை கட்டவிழ்த்து விடுவதோடு மேலும் இருபாதிப்புக்களை ஏற்படுத்துவதன் மூலமும் தொடர்ந்து தமிழ்மக்களை அரசாங்கம் பழிவாங்கி வருகிறது. தமிழ்ப் பகுதிகளிற்கு எரிபொருள் விநியோகம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இது உற்பத்திப் பாதிப்பை ஏற்படுத்தி இன்று தமிழ்மக்களை ஒருநேர உணவுக்கு கூட வழி இல்லாதவர்களாக்கியிருக்கிறது. யாழ். வைத்தியசாலையில் மருந்துகள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன. சுகாதாரச் சீர்கேடுகளால் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கு வைத்தியம் செய்யச் சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். தமிழ்மக்களின் உண்மைநிலையை கூறும் செய்திகள் தணிக்கைக்கு உள்ளாகின்றன.

## வெலிக்கடையில் நடந்த நரமாமிச வேட்டை!

சிறீலங்கா அரசாங்கம் தான் திட்டமிட்டபடி வெலிக்கடைச் சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் காவலில் வைத்திருந்த தமிழீழ விடுதலைப் போராளிகள் 52 பேரை வெறித்தனமாக கத்திகள், கம்பிகளால் தனது ஏவல் நாய்களின் துணையுடன் கோரத்தனமாகப் படுகொலை செய்துள்ளது. குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை, டாக்டர் இராஜசுந்தரம் போன்ற பலர் கொலையுண்டவர்களாவார்.

## தமிழீழக் கோரிக்கைக்கு தடை!

பிரிவினையை தடைசெய்யும் சட்டத்தை சிறீலங்கா பாராளுமன்றம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. அவலத் தீவில் தமிழ் மக்கள் சிக்கித் தவித்து வருந்தும் இந்த வேளையில் அவசர அவசரமாக சிறீலங்கா அரசாங்கம் தமிழீழக் கோரிக்கையையும் தமிழர் விடுதலைக் கூட்டணியினையும் தடை செய்துள்ளது. மீறி எவராவது பிரிவினைக் கோரிக்கையை எழுப்பினால் அவர்களது குடியியல் உரிமை பறிக்கப்படும். பாராளுமன்றத்தில் இம்மசோதா இருந்த விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பங்கு கொள்ளவில்லை. சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஐ.தே.க.வுடன் இணைந்து மசோதாவிற்கு சார்பாக வாக்களித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ○ இடதுசாரிக் கட்சிகளுக்கு தடை! தலைவர்களைத் தேடி பெரும் வேட்டை!

தான் திட்டமிட்டபடி ஆயுதப்படையினரும் தனது காடையர் கும்பலினரும் துணையுடனும் தமிழ் மக்களின் உடமைகளை நிர்மூலமாக்கிவிட்ட சிறீலங்கா அரசாங்கம் மக்களின் கவனத்தை திசை திருப்ப வேண்டி இடதுசாரிக் கட்சிகளின் திட்டமிட்ட சதி என்றும் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவே இதை அவை மேற்கொண்டன என்றும் பொய்க்குற்றஞ்சாட்டி சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), நவசமசமாஜக் கட்சி ஆகிய கட்சிகளைத் தடை செய்துள்ளது. வாசுதேவ நாணயக்கார, றோகண விஜேவீரா, மற்றும் பல முக்கிய உறுப்பினர்களைத் தேடி அரசு தீவிர வேட்டையில் ஈடுபட்டுள்ளது.

## ○ பொருளாதாரச் சகதியில் இலங்கை.

ஐ.தே.க. அரசின் பொருளாதாரக் கொள்கையால் வங்குரோத்து அடைந்துவிட்ட இலங்கை மக்கள் கொதித்தெழுவது தவிர்க்க முடியாது என்ற கட்டம் நெருங்கிவிட்டது. அரச அக்கிரமத்துக்கு தமிழ் மக்களின் 15க்கும் மேற்பட்ட பெரும் தொழில் நிறுவனங்களும் 100க்கும் மேற்பட்ட பெரும் வர்த்தக நிறுவனங்களும் பலியாகி முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளன. இது இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களை வேலையற்றவர்களாக்கி வீதிக்கு கொண்டுவந்துள்ளது. இவர்களுக்கு தம்மால் தொழில் வழங்க முடியாது என்று மேற்படி நிறுவன உரிமையாளர்கள் தெரிவித்துவிட்டார்கள். நாட்டின் உணவு விநியோகத்தில் 60% த்தினை மேற்கொண்ட தமிழ் வர்த்தக நிறுவனங்கள் முற்றாகவே நாசப்படுத்தப்பட்டுள்ளன. இன்று இலங்கையில் 1 கிலோ உருளைக் கிழங்கின் விலை 80 ரூபா. ஒரு கொத்து அரிசி 40 ரூபா. இது தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, சிங்கள மக்களுக்கும் தான். இந்தப் பொருளாதாரப் பாதிப்பு விரைவில் மக்களை அரசுக்கெதிராக கிளர்ந்தெழச் செய்யவிருக்கிறது. அதனை திசை திருப்ப அரசு திட்டம் தீட்டி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் மக்கள் உயிருடன்... பசியுடன் போராட்டம்! ஆனால் அதிஉத்தமருக்கோ அவசரத் தேவை ஆயுதங்கள்.

இன்று இலங்கையில் தமிழீழம், சிறீலங்கா இரு நாடுகளின் மக்களும் உயிருக்குப் பாதுகாப்பின்றி... பசிக்கு உணவின்றி பொருளாதாரச் சகதியுள்ளும் பயங்கரவாதத்தினுள்ளும் சிக்கித் தவிக்கையிலே அதிஉத்தமர் ஜெயவர்த்தனாவுக்கு மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதைவிட ஆயுதங்களே அவசரத் தேவையாக இருக்கிறது. பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்து இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அவலத்தீ சுட்டெரிக்கும் இவ்வேளையிலே ஜெயவர்த்தன தமது அமெரிக்க, பிரித்தானிய எஜமானர்களிடமும் பாகிஸ்தானிடமும் உடனடியாக தமக்கு ஆயுத உதவி தருமாறு கேட்டுள்ளார். இச்செய்தியை பகிரங்கப்படுத்திய சர்வதேசப் பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த நிருபரை சிறீலங்கா அரசு உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளது.

## இந்தியப் பிரதமரிடம் அதிஉத்தமரின் சகோதரர் தூது!

அரசியல் சகதியுள் சிக்கியுள்ள அதிஉத்தமர் ஜே.ஆர். ஜெயவர்த்தன தனது ஐ.தே.க. கொள்கையில் நம்பிக்கை இழந்தவராக தனது சகோதரர் ஜெயவர்த்தனவை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம் தூதனுப்பியுள்ளார். இந்தத்தூது அல்லல்படும் மக்களுக்கு உதவிகோரியல்ல. மாறாக இந்தியா தமிழீழ விடுதலைப் போராளிகட்கு பாதுகாப்பளித்து விடுதலைப் போராட்டத்துக்கு தளமாக இருப்பதாகவும் தமிழ்நாட்டு மக்களினதும் கட்சிகளினதும் ஆதரிப்பு சிறீலங்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் இவற்றை ஆட்சேபித்தே தமது சகோதரரை தூதனுப்பியுள்ளார் அதிஉத்தமர். எது எப்படியிருப்பினும் தமிழ் மக்களின் உயிர், உடமை, உரிமைகட்கு சரியான பாதுகாப்பு வழங்கப்படாவிடின் தாம் இலங்கைப்பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்க முடியாதது என்று திருமதி காந்தி உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமை விலங்குகள் உடையும்வரை அவலங்கள் எமக்கு தொடர்கதைதான்....

உலகின் ஒவ்வொரு மூலையிலும் வாழ்கின்ற... வாழ்வுடன் போராடுகின்ற ஒடுக்கப்படும் இனங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் அத்தனையையும் மொத்தமாய்க் கூட்டிணைத்து ஈழத்தில் எங்கள் தமிழ் மக்களுக்கு ஜெயவர்த்தனவின் பாசிச சிறிலங்கா அரசும் ... பேரினவாதக் காடையர்களும் இழைத்துள்ளனர். இனவாத அரக்கர்களின் வெறியாட்டத்திலிருந்து அங்கு எதுவுமே தப்பவில்லை. இனத்தின் அடிமை நிலையை அலட்சியம் செய்து அரச அடிவருடிகளாக இருந்தவர்கள், தொழிலதிபர்கள், ஜெயவர்த்தனவும், பிரேமதாசவும் எமக்கு பூரண பாதுகாப்புத் தருவார்கள் என்று மார்தட்டிய வர்களை அனைவருமே இன்று அகதிகள்தான். எமது அடிமை விலங்குகள் உடையும்வரை நாம் என்றும்... எங்குமே அகதிகள்தான். இன்று எம்மிடம்... ஈழத்தில் சிந்திக்கப்படுவதெல்லாம் சிந்திய சிவப்பான குருதித் துளிகளும்.. வெந்து சாம்பலான வீடும் கட்டடங்களும்.. .நெஞ்சை விட்டகலா சோகமும்... நினைவை விட்டுப் பிரியாத துயரமும் தான். சமீபத்திய அவலத்துளிகளில் சில....

- யாழ் நகரில் நடந்த இராணுவ வெறியாட்டம் 100க்கும் மேற்பட்ட தமிழ் உயிர்களைப் பலிவாங்கியுள்ளது. மானிப்பாயில் வைத்து பாடசாலைக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்த ஆறு சிறுவர்களை இராணுவம் வெளியே இழுத்துச் சுட்டுக் கொன்றதும்... திருநெல்வேலியில் 83 வயது முதியவரைக் கொன்றதும்... அரச பயங்கரவாதத்தின் சிகரங்கள். இராணுவத்தின் இந்த வெறியாட்டத்திற்கு சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போன்ற பலர் பலியாகி உயிரிழந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யூலை 24ம் திகதி கொழும்பிலே தமிழ் மக்களுக்கெதிரான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஏற்கனவே இத்தாக்குதல்கள் திட்டமிடப்பட்டதால் மிகுந்த வேகத்துடன் ஆயுதப்படையினரின் துணையுடன் பேரினவாதக் காடையரால் தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன, சொத்துக்கள் சூறையாடப்பட்டன, வீடுகள், தொழிற்சாலைகள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டன. இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாய் முகாம்களில் தஞ்சம் புகுந்தனர்.

- அரசாங்கம் பத்திரிகைத் தணிக்கையையும், வெளிநாட்டு நிருபர்களுக்கு பலத்த கட்டுப்பாடுகளையும் விதித்தபோதும் இலங்கையிலிருந்து மீண்ட உல்லாசப் பிரயாணிகள் தமிழர்க்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை அம்பலப்படுத்தினர். தமிழ் மக்கள் கண்ட இடங்களிலெல்லாம் உயிரோடு எரிக்கப்பட்டதை, கத்தியால் குத்திக் கிழிக்கப்பட்டதை கண்ணீர் மல்க கூறினர்.


- இந்தியத் தூதரகம், தூதுவரின் இல்லம், இந்தியவங்கி அனைத்தும் காடையரின் தாக்குதலுக்கு உள்ளாகியது. அதுமாத்திரமல்ல தூதரக அதிகாரிகளும் தாக்கப்பட்டனர். இந்திய பிரஜைகளின் வர்த்தக நிறுவனங்கள், வதிவிடங்கள் அனைத்தும் நாசமாக்கப்பட்டன. 200க்கும் மேற்பட்ட இந்தியப் பிரஜைகளும் அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்தனர்

- கண்டியில் உள்ள சகல தமிழ் வர்த்தக நிறுவனங்களும் பேரினவாதக் காடையரால் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டன. 50க்கும் மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். பதுளையிலும் தமிழ் மக்களும் அவர்களது நிறுவனங்களும் பேரினவாதப் பேய்களிடமிருந்து தப்பவில்லை. கத்தோலிக்க தேவாலயத்தால் நடத்தப்பட்ட சனசமூக நிலையமும் நாசமாக்கப்பட்டுள்ளது.

- மாத்தளையில் வாழ்ந்த தமிழ் மக்களும் அனைத்தையும் இழந்து அகதிகளாகியுள்ளனர். பிரசித்திபெற்ற மாரியம்மன் கோயில் முற்றாகவே அழிக்கப்பட்டுள்ளது கண்டி, பதுளை, மொனராகலை, நாவலப்பிட்டி, ஹட்டன் ஆகிய இடங்களில் தொடர்ந்தும் மலையகத் தமிழ் மக்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யூலை 26, 27ம் திகதிகளில் திருமலையில் கட்டவிழ்த்து விடப்பட்ட சிறீலங்காவின் கூட்டுப்படையினர் ஏற்கனவே பேரினவாதத் தாக்குதலின் கொடுமைக்குள்ளான தமிழ் மக்களை கொன்று குவித்துள்ளனர். இந்த வெறியாட்டத்தில் 400க்கும் மேற்பட்டவர் கொல்லப்பட்டனர். 200க்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. மீண்டும் 3,4ம் திகதிகளிலும் அரசபயங்கரவாதம் திருமலை மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

- 

உயிரோடு தமிழ் மக்கள் எரிக்கப்பட்ட போது... வீதி ஓரங்களில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட போது... பாதுகாப்பளிக்காத சிறீலங்கா இராணுவம்.... வீதியில் வெறித்தனமாக சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் மகனின் உடலுக்கு பாதுகாப்பளிக்கிறதாம்.

தமிழ் முரசுடனான சகல தொடர்புகட்கும்..

THE EDITOR
'TAMOUL MOURASSOU',
10, RUE DES MARTYRS.
75009 - PARIS (FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் தற்செயலானவை அல்ல; தீர்க்கமாக திட்டமிடப்பட்டவை.

பாசிசவாதி... பயங்கரவாதி...



ஏகாதிபத்தியத்தின் ஏவலாளி... ஜெயவர்த்தன.

சமீபத்தில் இலங்கையின் தமிழ்மக்கள் மீது வெறித்தனமாக நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் தற்செயலானவையோ அன்றி இரசாங்கம் பிரச்சாரம் செய்வதுபோல் சீர் இனக்கலவரமோ அல்ல. தங்களுடைய அமெரிக்க எஜமான் போட்டுக்கொடுத்த திட்டத்தை செயற்படுத்த ஏகாதிபத்தியத்தின் ஏவல்நாய்கள் எடுத்த முயற்சியின் முதல்கட்டம்தான் இது. நடந்து முடிந்த சம்பவங்களின் தொகுப்பு இதை தெளிவாக நிரூபிக்கிறது.

யூலை மாதம் 11ம் திகதி லண்டனிலிருந்து வெளியாகும் டெயிலி ரெலிகிராப் பத்திரிகை நிருபருக்கு அதிஉத்தமர் ஜெயவர்த்தன தமிழ் மக்கள்மீது தனது படைகள் நிகழ்த்தப் போகும் நெறிகெட்ட தாக்குதலுக்கான முகவுரையை இப்படிக் கூறியிருந்தார் —... சுதந்திரத் தமிழீழத்துக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் போராளிகள் அனைவரையும் ஒழித்துக் கட்டுவேன் என்றும் தமிழ் மக்களின் அபிலாசைகளை நாம் கருத்தில் கொள்ளப் போவதில்லையென்றும், பிரிவினைத் தடைச் சட்டம் கொண்டுவரப் படும் எனவும் கூறியுள்ளார். இதன் பின்னர் நடந்த வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலை, யாழ். நகர் கொலைகள், பிரிவினைத் தடைச் சட்டங்கள் ஆகியன அதிஉத்தமரின் பேச்சை நிரூபித்துவிட்டன.

தனது திட்டங்களின் ஆரம்ப அம்சமாக யாழ்ப்பாண பகுதிக்கான புகையிரத, போக்குவரத்துச் சேவைகளை நிறுத்தி, வடபகுதியையும் பேரினவாதத் தாக்குதலில் கட்டவிழ்த்து விட்டு திருமலையையும் அரசாங்கம் தனிமைப்படுத்தியது. அரச அடக்குமுறையால் வெகுண்டெழுந்து வடமாகாணத்தில் அரச இயந்திரத்தை ஸ்தம்பிதமாக்கிவிட்ட தமிழ் தீவிரவாத இளைஞர்களுக்கு ஆத்திரமூட்டிய அந்த ஆத்திரமூட்டலின் எதிர்விளைவாக தான் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடும் திட்டத்தோடு சிறீலங்கா இராணுவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு தமிழ் பெண்களை கற்பழித்ததும் அதில் இருவரைத் கொலை செய்ததும் அந்த ஆத்திரத்தில் இளைஞர்கள் 13 இராணுவத்தினரைக் கண்ணிவெடி வைத்துக் கொன்றதும் இதை எதிர்பார்த்த அரசு தனது வெறியாட்டத்தை ஆரம்பித்தது. இந்த இராணுவத்தினரின் உடல்கள் கனத்தை மயானத்துக்கு கொண்டு வரப்பட்ட போது ஜெயவர்த்தனவை மீறி மரணவிசாரணை சிறில்மத்தியூவினால் வேண்டுமென்று தாமதப்படுத்தப்பட்டு அந்த நேர இடைவெளியில் ஐ.தே.க.வின் விசேட படைப்பிரிவான 25000க்கும் மேற்பட்ட காடையர் கும்பல் ஏவிவிடப்பட்டது. இவர்களோ தமிழ்மக்கள் மீது தாக்குதல் ஆரம்பித்தனர். தாக்குதல்கள் ஏற்கனவே தெளிவாக திட்டமிடப்பட்டபடியால் துரிதமாக நிகழ்த்தப்பட்டன. தயாரித்து வைக்கப்பட்ட பட்டியல்களைப் பார்த்து தமிழ்மக்களின் வதிவிடங்கள், வீடுகள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் துவம்சம் செய்யப்பட்டன. ஆரம்பகட்டத்தில் அகதிகளான தமிழ் மக்களுக்கு முகாம்களை ஏற்படுத்தக்கூட அரசு மறுத்தது. ஒவ்வொரு நகர்களையும் தனிமைப்படுத்தி அங்கு வாழும் தமிழ்மக்களை தாக்கி அவர்களது உடைமைகளை சூறையாடியது.

இந்தக்கட்டத்தில் இந்த அக்கிரமங்களைக் கண்டித்து இந்திய அரசு தனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்து. சிறிலங்காவின் அமைச்சர்களும், ஊதுகுழல் பத்திரிகைகளும் வரிந்து கட்டிக்கொண்டு இந்தியப்பிரதமரையும், இந்திய அரசையும் கண்டித்தன. இச்செயல் இந்தியாவை சீண்டிப்பார்க்கும் முயற்சியாகும். இதன் பின்னர் இந்தியவங்கி, இந்திய தூதுவர் வதிவிடம், இந்தியப் பிரஜைகளின் வர்த்தக நிறுவனங்கள், மலையகப் பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவழியினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அது மாத்திரமல்ல ஜெயவர்த்தன இந்திய அரசு தமிழ் தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கிறது என்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு தளமமைத்துக் கொடுக்கிறது என்றும் குற்றஞ்சாட்டி இந்தியாவை பகிரங்கமாகவே சண்டைக்கு அழைத்தார். அது மாத்திரமல்ல ஆயிரக்கணக்கான அகதிகளை இந்தியா அனுப்பிய கப்பலில் தமிழீழத்துக்கு அனுப்ப மறுத்து பணயக்கைதிகளாக வைத்து மிரட்டினர்.

அதே வேளையில் இன்னொருபுறமாக சி.ஐ.ஏ.யின் இலங்கைப் பிரதிநிதியான சிறில்மத்தியூ ஜெயவர்த்தனவை பதவியிலிருந்து கவிழ்த்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிப்படை முயற்சியான இராணுவ அரசை இலங்கையில் ஏற்படுத்தும் செயற்பாட்டை மேற்கொண்டார். இவர்கள் அனைவரதும் அடிப்படை நோக்கம் இந்தியாவை கொதித்தெழச் செய்து உடனடியாக தலையிடச் செய்து அதன் பின்னணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கக் கடற்படையை இந்து சமுத்திரத்துக்கு அழைத்து திருமலையை நிரந்தரமாக தாரைவார்த்துக் கொடுப்பதற்கே யாகும். இந்தக் கட்டத்தில் இந்தியப் பிரதமரின் சாதுரியமும், தமிழ்நாடு முதற்கொண்டு இந்தியாவின் சகல மாநிலங்களிலும் வெளிப்பட்டெழுந்த மக்கள் கூட்டமும் சிறிலங்கா அரசுக்கு அச்சத்தையும் ஏகாதிபத்தியத்தின் சதிக்கு தோல்வியை யும் கொடுத்தது.

இந்நிலையில் ஜெயவர்த்தனா தனது பதவி பறிபோகப் போவதை உணர்ந்து தன்னுடைய அமெரிக்க எஜமானுக்கு தனது விசுவாசத்தை உணர்த்தி பதவியை காப்பாற்றும் நோக்க சோவியத் யூனியனையும், இதர சமவுடமை நாடுகளையும் குற்றஞ்சாட்டியதுடன் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியையும் இடது சாரிக் கட்சிகளையும் தடைசெய்துள்ளார். இவையெல்லாம் காட்டுவது என்னவென்றால் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள பயங்கரவாதம் தமிழீழ சுதந்திரம் கிடைக்கும்வரை ஓயாது [illegible] அதுவரை அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்துசமுத்திரத்தில் ஊன்றுவதற்கு இடம்தேடி தனது சதிவேலைகளை தொடரும்.


## பேரவையின் சில முயற்சிகள்....

தமிழ் மக்களுக்கெதிராக சிறிலங்கா அரசாங்கம் தொடர்ச்சியாக இழைத்துவரும் கொடுமைகளை 'சிறிலங்காவில் மனித உரிமை மீறல்கள்' - HUMAN RIGHT VIOLATION IN-SRILANKA தலைப்புக் கொண்ட அறிக்கை மூலம் தொகுத்து பிரான்ஸிலுள்ள ஸ்ராஸ்பேர்க்கில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைக் கழகத்தின் பதினான்காவது ஆய்வுப் பருவத்தின் போது தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்) மேற்படி மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விநியோகித்தது.

தமிழ்மக்களுக்கெதிராக இழைக்கப்படும் கொடுமைகளை தலையிட்டு நிறுத்துமாறு இந்தியப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர், சோவியத் அதிபதி, கியூபா ஜனாதிபதி, வியட் தலைவர் உட்பட பல்வேறு தலைவர்கள், இயக்கங்களை பேரவை தந்திகள் மூலம் வேண்டியதுடன் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புகொண்டு உதவிகளை புரியுமாறும் வேண்டியதுடன். அத்துடன் இரு பேரவைப் பிரதிநிதிகளை இந்தியாவுக்கு அனுப்பி விடுதலைக்கான முன் முயற்சிகளை மேற்கொள்ள முயற்சியும் செய்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டிய சிறையின் உள்ளே புத்தனின் சீடர்கள் புரிந்த அக்கிரமம்





சிறீலங்கா அரசாங்கம் தான் திட்டமிட்டபடி யூலை 25,27ம் திகதிகளில் வெலிக்கடை சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 'பூரண பாதுகாப்புடன்' காவலில் வைக்கப் பட்டிருந்த தமிழீழ விடுதலைப் போராளிகளை தனது ஏவல் நாய்களின் துணையுடன் கோரமாக படுகொலை செய்துள்ளது. இதுவரை கிடைத்த விபரங்களின்படி கீழ்க்காணும் ஈழப்போராளிகள் அதிஉத்தமரின் சீடர்களால் வெட்டி... குத்தி... கொலையுண்டிருக்கிறார்கள்.

- செல்லராசா யோகச்சந்திரன் (குட்டிமணி) வல்வெட்டித்துறை.
- நடராசா தங்கவேல் (தங்கத்துரை)
- எஸ். சிவசுப்ரமணியம் (தேவன்) அச்சுவேலி.
- சி. ஜெயநாதன். (ஜெகன்) தொண்டமானாறு.
- என். சிவபாதம் அச்சுவேலி.
- தேவநாயகம் பாஸ்கரன். திருக்கோயில்.
- பொன்னம்பலம் தேவகுமார் கல்முனை.
- ஏ. மரியாம்பிள்ளை. இளவாலை.
- முத்துக்குமார் சிறிகுமார் உரும்பிராய்.
- ஏ. குமார் வல்வெட்டித்துறை.
- சி. நடேசுதாசன். வல்வெட்டித்துறை.
- கந்தசாமி சர்வேஸ்வரன். துன்னாலை.
- சிவபாதம் நீதிராசா. துன்னாலை.
- எஸ். கணேசலிங்கம் தம்பாலை.
- செல்வி ராஜரட்ணம் தெல்லிப்பழை.
- ரி. ஜெயமுகுந்தன். (பரமசிவம்) சாவகச்சேரி.
- கே. அன்பழகன் திரியாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- டாக்டர் ராஜசுந்தரம் வவுனியா
- அந்தோனிப்பிள்ளை உதயகுமார்
- ஜெயரட்னம் (சின்னராசா) ஆனைக் கோட்டை.
- பாலசுப்ரமணியம்
- காசிப்பிள்ளை சுரேஷ்குமார் கோவளை.
- பொன்னம்மா துரைராஜா (தங்கத்துரை)
- சி. ஞானசேகரம் வவுனியா
- உதயகுமார்.
- எஸ். மனோரஞ்சன் (மனோ)
- பி. தேவகுமார் (அரபாத்) பண்டத்தரிப்பு.
- ஆறுமுகம் செல்வன் (அப்பு) பண்டத்தரிப்பு.
- கே. மயில்வாகனம் சுழிபுரம்.
- கதிரவேற்பிள்ளை ஈஸ்வரநாதன்
- கிருஷ்ணபிள்ளை நடராசா
- கோதண்டபிள்ளை தேவராஜசிங்கம்.
- வேலுப்பிள்ளை சந்திரகுமார்.
- செல்லச்சாமி குமார்.

- தம்பு கந்தையா. புத்தூர்.
- சின்னப்பு சந்திரேஸ்வரன் அச்சுவேலி
- சித்திரவேல் சிவானந்தராசா கிளிவெட்டி.
- கந்தையா ராஜேந்திரன் (றொபேட்) தெல்லிப்பளை
- அமிர்தநாயகம் பிலிப்
- குலசிங்கம் குமார்.
- ஞானமுத்து நவரட்ணசிங்கம்.
- சின்னத்துரை அருந்தவராசா
- மகேந்திரன்.
- காசிநாதன் திலகநாதன்
- அழகராசா ராஜன்.
- சோமு பாலச்சந்திரன்
- யோகச்சந்திரன் (கில்)
- கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
- அம்பலம் சுந்தரம்
- ராசா யோகநாதன்
- கருப்பையா கிருஷ்ணகுமார்
- சிற்றம்பலம் சந்திரகுமார்
- ராமலிங்கம் பாலச்சந்திரன்

ஆகஸ்ட் 9 அல்லது 10 ம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட மேலும் ஒரு படுகொலையில் 25 தமிழ் போராளிகள் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் கிடைத்துள்ளன. அதேவேளையில் டாக்டர் தர்மலிங்கம் கொல்லப்பட்டதாக LE MONDE இதழும் நிர்மலா நித்தியானந்தன் கொல்லப்பட்டதாக HINUSTAN TIME இதழும் செய்தி வெளி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பெருநகர்கள் தோறும் சிறிலங்கா அரசின் அடக்குமுறைக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்கள்.



பாரிஸ், லண்டன், பொன், ஜெனிவா, நியூயோர்க், சிட்னி, டொரன்டோ, டெல்லி, மெல்பேர்ன் போன்ற பல உலகப் பெருநகரங்களில் தமிழ்மக்களுக்கு சிறிலங்கா அரசு இழைத்து வரும் கொடுமைகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கான தமிழ்மக்களும், இதர மக்களும் பெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். தொடர்ச்சியான இப்போராட்டங்கள் சிறிலங்கா அரசின் கொடுமைகளை உலக அரங்கில் அம்பலப்படுத்தியுள்ளன.

இவ்வரிசையில் பிரான்சில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் பாரிசிலுள்ள சிறிலங்கா தூதுவராலயத்துக்கு அண்மையிலும், எப்பாட்டசிப்ட் இயக்கத்தால் ஏயர் லங்கா முகவர் நிலையத்துக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்சு)யும் கலந்து கொண்டது. இதுதவிர தமிழீழ விடுதலைப் பேரவை, தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (பிரான்சுக் கிளை) ஆகிய இயக்கங்களுடன் இந்திய தமிழர்களும் இணைந்து அமைத்த தமிழர் விடுதலைப் பேரணி) இந்தியத் தூதரகத்துக்கு முன்னால் ஒரு ஆர்ப்பாட்டத்தையும், உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தி உடனடியாக இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இந்திய அரசைத் தலையிடுமாறு கோரியது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வார்ப்பாட்டங்களில் பெருந்தொகையான மக்கள் உணர்ச்சிக் கொந்தளிப்புடன் கலந்து வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAMOUL MOURASSOU

MURASU 1 * AOUT - 1983 * OLY 10

## LES TROUBLES RACIAUX S'ETENDENT DANS LE PAYS

Depuis le départ des anglais de Srilanka, en 1948, les partis qui sont successivement arrivés au pouvoir ont oprimé le peuple tamoule. Les peuple tamoules font la lutte pour la libération de leur pays "Tamil Eelam".

Les troubles raciaux ont déjà été en 1956, 1958, 1961, 1971, 1977 et 1981 à Srilanka pour opprimer la lutte de la libération de tamoules. Plusieurs tamouls ont été morts pendant les troubles raciaux de chaque année.

Cette fois, les troubles raciaux ont été commencés par les forces armées dans les région tamoules. Plusieurs tamouls incluse les étudiants, les femmes et les vieillards ont été tué par les forces armées dans les régions de tamoules Jaffna et Trincomalee. Le gouvernement n'a pas pris prompt mesures pour arrêter les terrorismes par les armées dans les région de tamoules.

Les émeutes raciales se sont étendu dans tout le pays. Les émeutieurs tuent les tamoules, pillards et brulent les maisons. Les armées n'a pas ouvert le feu sur les émeutieurs. Les magasins, les usines, les appartements des tamouls ont été incendiés par la foûle cinghalaise. Plusieurs tamouls ont été brulés avec les voitures par les foules cinghalaises devant les securité forces. La police et les soldats n'ont rien fait pour arrêter le génocide.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## REFUGIES DANS LES CAMPS

Plus de cent milles tamouls ont fait refugies à Srilanka. Ils sont dans 28 refugies camps. Les refugies ne sont pas donnés des repas à manger. Le gouvernement traite les refugies comme des annimaux dans les camps sans donnant les besoins fondamentaux. Il n'y a pas de place à dormir et toujours au bout des camps. Plusieurs refugies incluse les enfants et les vieillards sont malades et ne sont pas donnes des medicaments. A cause de faim, plusieurs refugies sont mort dans les camps.

Les representants de l'aide du comité internationale de la croix rouge sont refusés à entrer dans les camps de refugies. Le gouvernement ne prends pas l'action pour evacuer les refugies vers régions du nord et de l'est qui sont leurs neant place. Les armées ont été tué plus de centaines refugies dans les camps. A cause de l'action du gouvernement et de l'armée, les refugies vivent avec peur dans les camps.

## MASSACRE DANS LE PRISON

Plus de ciquante tamouls qui sont fait la lutte pour la libération de "Tamil Eelam" ont été massacrés par leur codétenus dans la prison de Welikada qui est dans le capitale de Srilanka. Ils sont été massacrés devant les guardiens de la prisons. Parmi les victims, se trouve l'un chef du Front de Libération des Tamouls M.S. Dharmalingam, un septuagénaire, M.Rajasundaram- le secretaire de Gandhiam Organisation (un organisation sociale). Les victimes sont arrêtés sous les lois de prévention du terrorisme sans inqueté, pour plusieurs mois. A cause de la torture dans les camps de l'armées, ils sont transportés de la camp de l'armée à la prison de Welikada après la décision par le président M.J.R.Jayawardena.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Le gouvernement n'a pas pris l'action pour arrêter le massacre parceque le massacre a été pris deux fois dans la même prison dans une semaine. Le gouvernement a introduit censure de la presse et il supprime les vérités.

## L'INCENDIE DE LA CHANCELLERIE INDIENNE

Les émeûtiers ont incendié la chancellerie indienne et la banque de l'inde. Ils ont attaqué les residences de diplomates indiens. Les diplomates ont dû se réfugier dans un hôtel. Un fonctionnaire de l'ambassade a été blessé au cours des affrontements.

Le gouvernement indien a rappelé aux autorités de Colombo leurs obligations de garantir la sécurité des diplomates et des locaux diplomatiques. Ministre des affaires étrangère de l'inde, M. Narasimha Rao a ajouté que si Colombo laissait la situation se dégrader cela risquerait de nuire aux relations entre les deux pays, déjà tenduées. Les partis de l'opposition indiens ont reproché au gouvernement sa "prudence excessive" dans cette affaires.

## APPELE A MADAME GANDHI

En inde, alors que tous les partis sont unanimés pour exprimer leur solidarité avec la population tamoule de Srilanka, de nombreuse manifestations ont lieu quotidiennement dans plusieurs villes de l'inde. Une délégation incluse tous les partis du Tamil Nadu (un état de l'inde) a rencontré et demandé Mme.Gandhi pour intervenir les problèmes du tamoule à Srilanka. La délégation aussi a demandé pour fournir les alimentation et médicament pour les réfugies dans les camps à Srilanka.

Elle a assuré que le gouvernement indien voyait dans la situation des tamouls de Srilanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"un problème nationale". Le ministère indien des affaires étrangères M.Narasimha Rao a été envoyé par Mme;Gandhi pour observer les problèmes des tamouls à Srilanka.

## LE PARTI DES TAMOULS A ETE INTERDIT PAR LE GOUVERNEMENT SRILANKAIS

Le gouvernement a introduit un amendement constitutionnel à arrêter la demande "Tamil Eelam" qui est demandé par les tamouls. La demande de "Tamil Eelam" a été fait écho dans le parlement par les députés du Front Uni de Libération Tamoule.

Conformément à l'amendement le FULT ne peut pas exister au parlement parcequéil demande "Tamil Eelam" pour tamouls. Le gouvernement supprime les droites de tamouls et essaye à anéantir la nation tamoule.

## MADAME GANDHI DEMANDE LE PRESIDENT DE SRILANKA A RECHERCHER UNE SOLUTION DURABLE POUR LES PROBLEMES DE TAMOULS A SRILANKA

Le premier ministre indien a dit à l'envoyé personnel du président srilankais que son pays a estimé les tamouls à Srilanka sont opprimé par le gouvernement srilankais. Elle a ajouté que le gouvernement srilankais faudra rechercher une solution durable pour éviter les raciaux riots qui sont pris fréquemment. Les tamouls sont toujours affecté par raciaux riots.

Mme.Gandhi a aussi annoncé la création d'un fonds de secours à Srilanka doté de 10 millions de roupies et auquel elle a invité tous ses compatriotes à contribuer généreusement.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளாக்கியும் அவர்கள் விடவில்லை ...



அனைத்தையும் இழந்து அகதிகளாகி வாழ்வுடன் போராடும் எம் தமிழ் மக்கள்.

ஆயிரக் கணக்கான தமிழ் உயிர்களைப் பறித்து... கோடிக் கணக்கான பொருட்கள் பெறுமதி வாய்ந்த தமிழ் சொத்துக்களை சூறையாடி... துவம்சம் செய்து... இலட்சத்தை அண்மித்த தமிழ்மக்களை அகதிகளாக்கியதுடன் மாத்திரம் சிறீலங்கா அரசின் வெறி அடங்கவில்லை. அகதிகள் முகாம்களிலும் எம் மக்களை வாட்டி வதைத்தது. அங்கே எம்மக்கள் தினமும் உயிருடன் போராடினார்கள். சிறீலங்கா அரசின் கையில் பணயக் கைதிகள் ஆனார்கள். ஒவ்வொரு அகதிகள் முகாம்களிலும் எம்மக்கள் பட்ட கொடுமைக்கு எல்லையே இல்லை.

ஒவ்வொரு முகாம்களிலும் 8,000 — 10,000 வரையிலான தமிழ்மக்கள் அகதிகளாக அடைக்கப்பட்டனர். இத்தனை பேருக்கும் 2 மலசலகூடம்தான் இருந்தது. குடிநீருக்கு ஒரு குழாய் மாத்திரம் இருந்தது. பல நாட்கள் உணவு வழங்கப்படவில்லை. கடைசி நாட்களில் ஒருவேளை உணவு வழங்கப்பட்டது. அவ்வுணவுக்கு பதிலாக இராணுவத்தினர் எம்மக்களிடமிருந்து நகைகளை பிடுங்கிக் கொண்டனர். சுகாதார வசதியின்மையால் முகாம்களில் பரவிய வியாதிகட்கு மருத்துவ வசதி எதுவுமே அளிக்கப்படவில்லை.

அதுமாத்திரமல்ல அரசாங்கம் இந்தமக்களை பணயக் கைதிகளாக வைத்து தனது அக்கிரமத்தை தொடர்ந்தது. இந்தியாவுக்கு சவால்விட்டது. இந்தியக் கப்பல்களில் அகதிகளை அனுப்ப மறுத்தது. அகதிகள் பற்றி செய்தி வெளியிட அனுமதி மறுத்தது. அகதிகள் முகாம்களுக்கு நிருபர்களை செல்லவிடாது தடுத்தது. மருத்துவ உதவி செய்ய சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களை நாடுகடத்தியது. ஈற்றில் இந்திய அரசின் வற்புறுத்தலின் பின்பு தமிழ்மக்களை தமிழீழத்துக்கு கப்பல்கள் மூலம் அனுப்ப ஒப்புக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிசில் ஏற்பட்ட தமிழர்-சிங்களவர் மோதல் திட்டமிடப்பட்ட சிறீலங்கா அரச சதியின் ஒரு அங்கமே!

பாரிசில் தமிழ்-சிங்கள இன மக்களிடையே (?) ஏற்பட்ட மோதல்கள் மூன்று உயிர்களைப் பலிவாங்கி 13 பேரை காயப்படுத்தி சிலரை கைதிகளாக்கியுள்ளது. இந்தத் தாக்குதல்கள் சிறீலங்கா அரசின் சதித்திட்டத்தின் ஒரு அங்கம். ஒரு குறிப்பிட்ட பேரினவாதக் கும்பல் மாத்திரம் குறிப்பிடப்பட்ட வாகனங்களில் திரிந்து அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்கி ஆத்திரமூட்டலை மேற்கொண்டிருக்கிறது. இந்த ஆத்திரமூட்டலே தமிழ் மக்களை தாக்குதலுக்கும்... தற்பாதுகாப்புக்கும் தூண்டியது. தொடர்ந்தும்... தொடர்ந்தும் சிறீலங்கா அரசின் கைக்கூலிகள் தமிழ்மக்கள்மீது தாக்குதல் தொடர்ந்ததும்... சிறீலங்கா அரசின் பிரான்சுத் தூதர் தமிழ்மக்களை பயங்கரவாதிகளாகச் சித்தரித்து... பிரான்சு அரசிடம் தமக்கு பாதுகாப்புக் கோரியதும்... தமிழ் மக்களிடையே வதந்திகளைப் பரப்பி அவர்களுக்கு ஆத்திரமூட்டியதும்... உலக முதலாளித்துவப் பத்திரிகைகள் இச்சம்பவங்களைப் பெரிதுபடுத்தியதும்... இந்தச் செய்திகளின் எதிர்விளைவாக இலங்கையில் அகதிகள் முகாம்களில் அடைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகளை கொல்லும் முயற்சியின் முன்னோடியாக இரு அகதிகள் முகாம்கள் இனவெறித் தாக்கப்பட்டதும் இது அரசசதியின் ஒரு அங்கமே என்பதை தெரிவிக்கின்றது. பிரான்சில் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு கிடைத்துவரும் ஆதரவை திசை திருப்பும் முயற்சியாகவும் இருக்கின்றது.

இதுபோலவே வெறிகொண்ட பேரினவாதக் கும்பலைச் சேர்ந்த 200 பேர் ஆம்ஸ்டர்டாமில் தமிழ்க்குடும்பங்கள் வசித்த நெதர்லாண்டுவாசி ஒருவரின் வீட்டை தாக்கியுள்ளனர்.



**ஐயம்பிள்ளை மகேந்திரன் - நல்லூர்.**
பிறப்பு: 17.03.1954
இறப்பு: 31.07.1983.

இனவெறியர்களின் தாக்குதலுக்கு இலக்காகி பாரிசில் அகாலமரணமடைந்த ஐயம்பிள்ளை மகேந்திரனை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர்க்கும், உறவினர், நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த துயரை தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ☆ சிறீலங்கா அரசின் கொடுமை கண்டு சீறிக் கிளம்புகிறது இந்தியா. ☆ ☆ ☆




இலங்கையில் தமிழ்மக்களுக்கு சிறீலங்கா அரசு இழைக்கும் கொடுமைகள் கண்டு விம்மி...வெறுத்து...வெகுண்டு புறப்பட்ட இந்திய இளைஞர் கூட்டம்.

---

சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகள் கண்டு வெகுண்டுக் கிளம்பிய இந்திய மக்கள் தலைவர்கள் தவிக்கிறார்கள். தமிழகத்தின் தலைமையில் அணிதிரண்டிருக்கும் புரட்சிக் கூட்டம் உடனடியாக இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவை தலையிட்டு தீர்வு காணுமாறு வற்புறுத்தி பெரும் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

ஆகஸ்ட் 2ம் திகதி தமிழகத்தின் 4½க் கோடி மக்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உடனடியாகத் தலையிடு மாறு கோரி மேற்கொண்ட பொது வேலைநிறுத்தம் தமிழகத்தை ஸ்தம்பிக்க வைத்து தமிழகத்தின் அனைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிகளும் இதில் கலந்து கொண்டன. இவ்வச்சங்களைக் கான இளைஞர்கள் உணர்ச்சிக் கொதிப்புடன் தொடர்ந்து போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

ராஜபாளையத்தில் அ.தி.மு.க. தொண்டர் இருவரும், மதுரையில் தி.மு.க. தொண்டர் இருவரும் ஈழத்தமிழர் பிரச்சினையில் உடனே அரசைத் தலையிடுமாறு கோரி தமக்குத்தாமே தீயிட்டுக் கொண்டுள்ளனர்.

இந்தியப் பாராளுமன்றத்தில் சகல கட்சிகளின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இணைந்து சிறீலங்கா அரசைக் கண்டித்துள்ளதுடன் தமிழர் பிரச்சனையில் உடனடியாகத் தலையிடுமாறு அரசை வற்புறுத்திவருகின்றனர்.


200க்கும் மேற்பட்ட இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் உள்ள சிறீலங்கா தூதராலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அனைத்துக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து சிறீலங்கா தூதுவராலயத்திற்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

அனைத்துக்கும் மேலாக சமீபத்தில் இலங்கைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அரசபயங்கரவாதம் பற்றித் தமது கடும் அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தம்மை சந்தித்த சிறீலங்கா ஜனாதிபதியின் சகோதரர் ஹெக்டர் ஜெயவர்த்தனவிடம் 'சிறீலங்கா அரசைக் காப்பாற்ற இந்தியா ஒரு போதும் படை அனுப்பாதென்றும், தமிழ் மக்களுடைய பிரச்சினையை அரசின் போலிவாக்குறுதிகள் தீர்க்காதெனவும், தமிழ்மக்களின் பிரச்சனையை தீர்க்க உடனடியாக தமிழ்க்கட்சிகளுடன் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும் இந்தியாவின் சர்வகட்சி உறுப்பினர்களும் இலங்கைக்கு விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் தமிழ்மக்களின் பிரச்சனை தீர்க்கப்படாவிடின் இந்தியா தலையிடுவது தவிர்க்க முடியாதது எனவும் உறுதியாகக் கூறியுள்ளார்.

அதேவேளையில் சென்னையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பாத யாத்திரை மேற்கொண்டு அங்கிருந்து படகுகளூடாக இலங்கையை அடைவதாக தமது இரத்தத்தில் கையொப்பமிட்டுள்ள 5,000 தமிழர்களின் சபதமும் சிறீலங்கா அரசுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★★ விடுதலை வேந்தர்கள் ★★★



குட்டிமணி.... ஜெகன்... தங்கத்துரை...

குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப் போராளிகளையும் டாக்டர் ராஜசுந்தரம் போன்ற சமூக சேவையாளர்களையும் சட்டத்தின் மூலம் எந்தத் தண்டனைக்கும் உள்ளாக்க முடியாது என்பதையும் இவர்கள் வெளியே இருந்தால் தமிழீழப் போராட்டம் முடுக்கிவிடப்படும் என்பதையும் தெரிந்து கொண்ட அரசாங்கம் வெகு திறமையாக திட்டமிட்டபடி கோரமாகக் கொலை செய்துவிட்டது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது தனது கண்களை தமிழ் மக்களுக்கு வழங்கும்படி கேட்ட குட்டிமணியின் கண்கள் கத்தியால் தோண்டிக் கிழிக்கப்பட்டன. தங்கத்துரை, ஜெகன் போன்ற பல போராளிகளின் கால்கள் அறுத்து முறிக்கப்பட்டன. கத்திகள், கம்பிகள், பொல்லுகளால் ஒவ்வொரு போராளியும் அடித்து நொறுக்கப்பட்டு கோரச் சித்திரவதைகளுக்கு உள்ளாகியே கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசபடையினரும், சிறைக்காவலரும் இந்த அக்கிரமத்தை நிகழ்த்தியுள்ளனர். விடுதலைக்காக தம் உயிர் உட்பட அனைத்தையும் அர்ப்பணித்த எம் விடுதலை வேந்தர்களின் தியாகம் வீண் போகுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ ★ அடுத்தது என்ன? ★ ★ ★

ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்டு, இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டு மீண்டும் எம்மக்கள் நசுக்கப்பட்டிருக்கிறார்கள்... நாசமாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கட்டத்தில் எம் தமிழினம் அடுத்துச் செய்யப் போவதென்ன...? வழமையாக வந்து போகும் வைபவங்கள் போன்றது தானே என்று விட்டுவிட்டு மீண்டும் சிறிலங்காவில் தமது முதலீடுகளை ஆரம்பிக்கப் போகிறார்களா...? அல்லது திடீரென்று தமக்குள் தாமே முடங்கி விட்ட தமிழீழ விடுதலைத் தீயை தணித்து விட்டு மீண்டும் ஆழ்ந்த தூக்கத்துள் அடங்கப் போகிறார்களா...?

அதுபோலவே தமிழீழ விடுதலை இயக்கங்களும் விடுதலையை சாதாரணமாக நினைத்து தம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற அசட்டுத் தைரியத்துடன் பரந்த நோக்கு இல்லாமல் விடுதலைப் போரையும் ஆத்திரமூட்டலையும் வேறுபடுத்தத் தெரியாமல் விடுதலைக்கான உலக உந்து சக்திகளை நெருங்காமல் தொடர்ந்தும் தனித்துவம் பேசி... ஐக்கியத்தை எதிர்த்து தமிழினத்தின் அழிவுக்கே காரணமாகப் போகிறார்களா...?

இவ் விடயத்தை நாம் தீர்மானமாக எங்கள் மனங்களில் பதித்துக் கொள்ள வேண்டும். நடைபெற்ற தாக்குதல்கள் சாதாரண சிறிலங்கா அரசு தமிழ்மக்கள் மீது நிகழ்த்தியதல்ல. அரசு தனது அமெரிக்க எஜமானின் கட்டளையை செயற்படுத்தியது. அவ்வளவுதான். ஏனெனில் இன்று தான் நினைத்த எதையும் சுதந்திரமாகச் செய்கின்ற நிலையில் இல்லை சிறிலங்கா அரசு. சர்வதேச நாணய சபையும், அமெரிக்க அரசும் இட்ட கட்டளையை செயற்படுத்தாவிட்டால் தனது அரசு கவிழ்ந்து இராணுவ ஆட்சி ஏற்படும் என்பது ஜெயவர்த்தனவிற்கு பூரணமாகத் தெரியும். இந்த நிலையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது அதனை ஜெயவர்த்தனவின் அரசிற்கு எதிரான தாக்குதல்களை நிறுத்தது அரசினைப் பாதுகாப்பளிக்க முயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எம் கண்முன்னால் சாட் நாட்டில் பதவியிலுள்ள தனது கைப்பொம்மை ஹப்ரேயின் ஆட்சிக்கெதிரான கிளர்ச்சியிலிருந்து அரசைப் பாதுகாக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் மில்லியன் கணக்கான டாலர்கள் பெறுமதிவாய்ந்த நவீனரக ஆயுதங்கள், போர் விமானங்கள், இவற்றோடு இராணுவப் பயிற்சியாளர்களை அனுப்பியதுடன் தனது போர்க்கப்பலையும் இப் பிரதேசத்துள் திருப்பியுள்ளது. இதே போலத்தான் ஜெயவர்த்தனவின் ஆட்சியையும் அமெரிக்கா பாதுகாக்கும். வியட்நாம் போல அமெரிக்க விமானங்கள் குண்டுகளை தமிழீழத்தில் வீசும். எனவே இந்தப் பேரழிவுகளிலிருந்து நம்மைப் பாதுகாக்க... 35 லட்சம் தமிழ் மக்களைப் பாதுகாக்க குறைந்தது நவீன ஆயுதங்களை இயக்க வல்ல பூரண அரசியல்... இராணுவ பயிற்சிபெற்ற 30,000 தமிழீழ பாதுகாப்பு இராணுவத்தினரை நாம் உருவாக்க வேண்டாமா?

இத்தகைய தமிழீழப் பாதுகாப்பு இராணுவ உருவாக்கலை நாங்கள் சர்வதேசத் தொடர்புகளை அலட்சியம் செய்து குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டு தனித்துவத்தையும், கல் தோன்றி மண் தோன்றா முன் தோன்றிய மூத்த தமிழன் பெருமையும் பேசிக்கொண்டு சாதிக்க முடியுமா? எனவே இத்தனை நாட்கள் நாம் செய்த தவறுகளை தொடராமல் உலக அரங்கினில் சோசலிசச் சக்திகளை இனங்கண்டு அவற்றோடு நாம் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும்.

இன்று எங்கள் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்குமுறைக்கெதிராக தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொதிப்பைப் பாருங்கள். இதை இந்தியாவின் இதர மாநிலங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும். இந்திய மக்களுடன் தமிழீழ மக்கள் பிணைப்பை ஏற்படுத்த வேண்டும். தொழிலாள வர்க்க கூட்டுறவு இதைச் சாத்தியமாக்கும். அதேபோல இந்திரா காந்தியின் கரங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் ஏகாதிபத்தியத்தின் சதிகளை ஸ்ரீமதி அறிந்துகொண்ட இந்திராவால் தமிழீழம் அங்கீகரிக்கப்படுவது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய மக்களுடன் எப்படிப் பிணைப்பை ஏற்படுத்துகிறோமோ அதுபோல உலகம் முழுவதும் ஒடுக்கப்பட்டு விடுதலைக்காக போராடும் சகல இன மக்களோடும் நாம் ஐக்கியப்பட வேண்டும். 1971 ல் ஆரம்பூல் வங்காள தேசத்தில் இலட்சம்பேர் கொல்லப்பட்ட போதும் ஆயிரக்கணக்கான பெண்கள் [illegible] கற்பழிக்கப்பட்ட போதும் நாம் வாளாவிருந்தோம். லெபனானில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதை நாம் அலட்சியம் செய்தோம். எல்சல்வடோரில் 40,000 பேருக்கு மேல் கொல்லப்பட்டதை.. படுவதை நாம் சட்டை செய்யவில்லை. தொடர்ந்தும் நாம் இப்படியே இருக்க முடியாது. ஒடுக்கப்படும் இனங்களின் துன்பங்களில் பங்கு கொண்டு அடக்குமுறைக்கெதிராக போராட வேண்டும்.


இவற்றுக்கும் மேலாக இன்று சிறீலங்காவில் 2 இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். பல தொழிற்சாலைகள் முற்றாகவே மூடப்பட்டுள்ளன. வெளிநாட்டு நிறுவனங்களுக்கான சாத்தியக்கூறுகள் கிடையாது. உல்லாசப் பிரயாணிகள் இனி இலங்கையை நினைக்கவே மாட்டார்கள். சர்வதேசிய கடனுக்கு வட்டி கட்ட இயலாத நிலையில் இருக்கும் சிறீலங்கா அரசுக்கு கடன் கொடுக்க ஆள் கிடையாது. ஒரு கிலோ உருளைக்கிழங்கு 80 ரூபாயும் அரிசி 60 ரூபாயும் விற்கிறது. பாண் கடைகளின் முன்னால் மக்கள் மைல் கணக்கான வரிசைகளில் நிற்கிறார்கள். எரிபொருளுக்குத் தட்டுப்பாடு. இவை தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல சிங்கள மக்களுக்கும்தான். இந்நிலையில் சிங்கள மக்கள் அரசுக்கெதிராக கொதித்துக் கிளம்பப் போவது தவிர்க்க முடியாதது. இதன் ஒரு அம்சமாகத்தான் இடதுசாரிக்கட்சிகள் தடை செய்யப்பட்டன. தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இன்று தமிழ் மக்கள் மீது ஏவிவிட்ட தன் படைகளை அரசு நாளை சிங்கள மக்கள் மீது ஏவிவிடப் போகிறது. இந்த நிலை எங்கள் போராட்டத்துக்கு அவசியமான கட்டம். எனவே அதற்கு நாங்கள் உடனே தயாராக வேண்டும். இல்லையெனில் மறுத்து தொடர்ந்து [illegible] இது நமக்கு இறுதித் தாக்கமாகி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சஞ்சாரம்

## பிரான்சு:

### சாட் அரசைக் காப்பாற்ற பிரான்சு படை அனுப்புகிறது.



தனது முன்னாள் காலனித்துவ நாடான சாட்டின் ஜனாதிபதி ஹைப்ரேயின் தலைமையிலான அரசுக்கு எதிராக எதிர்ப்புரட்சியாளர்களினால் நடத்தப்படும் தாக்குதல்களில் இருந்து அரசைப் பாதுகாக்க பிரான்சு அரசு 500 இராணுவ வீரர்களையும் பெருந்தொகையான ஆயுதங்களையும் அனுப்பி வைத்துள்ளது. ஹைப்ரேயின் அரசுக்கெதிரான போரை லிபியத் துணையுடன் சாட்டின் முன்னாள் ஜனாதிபதி குக்கோனியின் தலைமையிலான கொரில்லாப் படையினர் முடுக்கி விட்டுள்ளனர். சாட்டில் பல இடங்களில் அரசபடைகள் பின்வாங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### அமெரிக்க டொலருக்கெதிராக பிரெஞ்சு பிராங் தொடர்ந்து வீழ்ச்சி!

அமெரிக்க டொலருக்கெதிரான பிரெஞ்சு பிராங்கின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கிறது. பொருளாதார வரலாற்றில் இல்லாத அளவிற்கு 1 அமெரிக்க டொலர் 8.25F ஐ அண்மித்துள்ளது. அதிகரிக்கும் அமெரிக்க வட்டி விகிதமே இதற்குக் காரணமாகும். இது பிரான்சின் பெரும் பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதே வேளையில் அரசாங்கம் அமுல் நடத்தி வரும் பொருளாதாரக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் சீர்குலைந்த பிரெஞ்சுப் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அறிகுறிகளைக் காட்டத் தொடங்கியுள்ளன. எனினும் இக்கட்டுப்பாடுகளை தொடர்ந்து அமுல் நடத்துவதன் மூலமே நிலையான பொருளாதார அபிவிருத்தி கிட்டும் என பிரதமர் பியே மொறோவா கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரித்தானியா:

### ஜெயவர்த்தனவின் வருகைக்கெதிராக பிரித்தானிய பாராளுமன்றத்தில் பிரேரணை.

தமிழ் மக்களைப் படுகொலை செய்து அவர்களது சொத்துக்களைச் சூறையாடவைக்கும் சிறீலங்கா ஆட்சித்தலைவர் ஜெயவர்த்தன அக்டோபர் மாதம் லண்டனுக்கு மேற்கொள்ள பிரித்தானிய அரசால் விடப்பட்ட அழைப்பை மீளப்பெறுமாறு கோரும் பிரேரணையை பிரித்தானியப் பாராளுமன்றத்தில் 80 தொழிற்கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்துள்ளனர். பிரித்தானியப் பத்திரிகைகளும், செய்தி ஸ்தாபனங்களும் ஈழத்தமிழர் பிரச்சினையில் பெரும் ஈடுபாட்டைக் கொண்டுள்ளன.

### தமிழர்கட்கு இழைக்கப்படும் கொடுமைகளை உல்லாசப் பிரயாணிகள் விளக்கினர்.

தாங்கள் கண் முன்னாலேயே தமிழர்கள் பேரினவாதக் காடையினரால் உயிருடன் தீவைத்துக் கொளுத்தப்பட்டதையும், வெட்டிக் கொல்லப்பட்டதையும் இலங்கையிலிருந்து திரும்பிய பிரித்தானிய உல்லாசப் பிரயாணிகள் கண்ணீர்மல்க பிரித்தானிய தொலைக்காட்சிச் சேவைக்குக் கூறி இருக்கிறார்கள். இந்த அக்கிரமங்களைக் கட்டுப்படுத்த பொலிசாரோ, இராணுவத்தினரோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மாறாக காடையர்களுக்குத் துணைநின்றனர் என்றும் கூறிய இவர்கள் இலங்கையில் தமிழ் மக்களது நிலை பரிதாபகரமானது... பாதுகாப்பற்றது என்றும் கூறியுள்ளனர்.

## மேற்கு ஜேர்மனி:

### இலத்தீன் அமெரிக்கா தொடர்பான கொள்கையில் மேற்கு ஜேர்மன் ஆளும் கட்சியில் பிளவு!

இலத்தீன் அமெரிக்காவில் அமெரிக்கா மேற்கொள்ளும் இராணுவத் தலையீடு மேற்கு ஜேர்மனியின் ஆளும் கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களின் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. அமெரிக்கச் சார்பான கிறீஸ்தவ ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களிடையே, இக்கொள்கை பிளவை ஏற்படுத்தியுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌதமாலா:

### கௌதமாலாவில் ஆட்சிக் கவிழ்ப்பு!

ஜெனரல் ரையஸ் மொன்ரின் தலைமையிலான கௌதமாலாவின் இராணுவ அரசாங்கம் அவரது இராணுவச் சகாக்களாலேயே கவிழ்க்கப்பட்டது. புதிய இராணுவ அரசின் தலைவராக பாதுகாப்பமைச்சர் ஜெனரல் ஒஸ்கார் விக்ரறி பொறுப்பேற்றுள்ளார். அமெரிக்க அரசின் துணையுடனே இந்த ஆட்சிக் கவிழ்ப்பு நிகழ்ந்துள்ளது. இலத்தின் அமெரிக்காவில் தனது சாம்ராஜ்யங்களை விஸ்தரித்து சோவியத் சார்ச் சக்திகளை ஒடுக்குவதற்கு அமெரிக்கா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளின் ஒருபகுதியே இவ்வாட்சிக் கவிழ்ப்பாகும்.

## சிலி:

### சிலியில் தொடர்ந்து போராட்டங்கள்.

அமெரிக்க ஆதரவு சிலியின் இராணுவ அரசாங்கத்துக்கெதிராக மாணவர்களும், தொழிலாளர்களும் தொடர்ந்து பெரும் போராட்டங்களை நடத்திவருகின்றனர். 10வருடங்களுக்கு முன்னர் இத்தகைய போராட்டங்களை செயற்கை முறையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் சி.ஐ.ஏ. மூலம் தூண்டி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அலண்டேயின் அரசைக் கவிழ்த்தது. இன்று அதே அமெரிக்காவினால் பதவியில் வைக்கப்பட்டுள்ள அரசு பொருளாதார நெருக்கடிகளுக்கும் அதனால் கொதித்தெழுந்துள்ள மக்களின் போராட்டங்களுக்கும் இலக்காகி ஆட்டம் கண்டுள்ளது.

## எல் சல்வடோர்:

### சல்வடோர் இராணுவத்துக்கு தொடர்ந்து தோல்வி!

அப்பாவி மக்களை வேட்டையாடுவதில் புகழ் பெற்ற சல்வடோரின் இராணுவம் சமீபத்தில் அமெரிக்க போர் விற்பன்னர்களால் விசேட பயிற்சி பெற்றும் கூட தொடர்ச்சியாக இடதுசாரிக் கொரில்லாக்களுடனான போரில் தோல்வியடைந்துள்ளது. பல இடங்களில் கொரில்லாக்கள் இராணுவத்தினரை தாக்கி நகரங்களை கைப்பற்றி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா:

### ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தீவிர அக்கறை.

சிறீலங்கா அரசாங்கம் தொடர்ச்சியாக ஈழத்தமிழ் மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளை களைவது தொடர்பாக இந்திய அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. சமீபத்தில் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதம் குறித்து இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரிடம் தமது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்ததுடன் இந்திய அரசு தமது வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவை இலங்கைக்கு அனுப்பி நிலைமைகளை ஆராய்ந்திருக்கிறது. அத்தோடு திருமதி இந்திராகாந்தி சிறீலங்கா ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது ஆட்சேபனையை நேரடியாக தெரிவித்துள்ளதுடன் தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் இத்தகைய இன்னல்கள் இழைக்கப் படுமாயின் இந்தியா இப்பிரச்சினையில் தலையிடுவது தவிர்க்கமுடியாதது என்று பத்திரிகைகட்குப் பேட்டி யளித்துமுள்ளார். அத்துடன் அல்லற்பட்ட அகதிகளுக்கு உணவு, மருந்து போன்றவற்றையும் அவர்கள் தமிழீழத்துக்குச் செல்ல கப்பல்களையும் இந்தியா வழங்கியுள்ளது.

### 'ஈழப் பிரச்சினையில் இந்தியாவே தலையிடு!' நாடு முழுவதும் கோரிக்கைகள் ஒலிக்கின்றன.

வங்காள தேசப் பிரச்சினையில் தலையிட்டது போல உடனடியாக இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு தமிழ்மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்குமாறு இந்தியா முழுவதுமுள்ள பல்வேறு கட்சிகளும் இயக்கங்களும் மத்திய அரசைக் கோரியுள்ளன. இந்தியப் பாராளுமன்றத்தில் இது தொடர்பான விவாதம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 200க்கும் மேற்பட்ட பாராளுமன்ற அங்கத்தினர்கள் டெல்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்றல் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர். இது தவிர நாடு முழுவதும் எண்ணற்ற மாணவர்கள், தொழிலாளர்கள் தொடர்ச்சியான இது போன்ற போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ ஏகாதிபத்தியமும் ............ தமிழ் ஈழப் போராட்டமும்.

மூன்றாவது உலக நாட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சி அவர்களின் வாழும் உரிமையைக் கூட தனது கடவாய்ப்பற்களில் சப்பிப்புதம் பார்த்துவரும் உலக ஏகாதிபத்தியமும் அதன் தலையான அமெரிக்க ஏகாதிபத்தியமும் 1980 களின் தொடக்க காலத்திலேயே கடைவழியில் தனக்குத் தானே மண்ணை வாரிக் கொட்டும் நிகழ்ச்சிகளில் ஈ.டுபட்டு வருவதையே சமீபகாலங்களில் வெளியான செய்திகள் நமக்கு உணர்த்துகின்றன. இலத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து இலங்கை ஈறாக இரத்தக் களரிக்கு வித்திட்டு தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்று வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

வளர்முக நாடுகளுக்கு முன்மாதிரி... புதிய சகாப்தம் படைக்கப் புறப்பட்ட நாடு, இராணுவ ஆட்சிக்கு உட்பட்டால் பொன் கொழிக்கும் தன்மை பெறும் என சாட்சிக்கு இருக்கப்பட்ட நாடு... என்றெல்லாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் வர்ணிக்கப்பட்டு உலக அரங்கில் நிறுத்தப்பட்ட நாடான பிரேசில் இன்று தனது நாட்டின் கடன்சுமை தாங்காது தனது எசமானான அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் முட்டி மோதி நிற்கிறது. 80 பில்லியன் கடனைத் தலையில் சுமந்து உலகின் அதிகூடிய கடன்பெற்ற நாடாகத் திகழும் பிரேசிலின் வாழ்க்கைத்தரம் தொடர்ந்து அதலபாதாளத்தில் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கிறது. சர்வதேச நாணயசபை பிரேசிலிற்கு மேற்கொண்டு கடன் வழங்க முடியாது என்பதை அறுதியிட்டுக் கூறிவிட்டது. அமெரிக்காவின் தாட்டான் வங்கிகளான CHASE MANHATTON, BANK OF AMERICA உட்பட பல வர்த்தக வங்கிகள் தாம் கொடுத்த கடனுக்கான வட்டியையோ, நிலுவையையோ கூட இலத்தீன் அமெரிக்க நாடுகளிடமிருந்து மீளப்பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன. சர்வதேச சமூக வங்கி (INTERNATIONAL BANK FOR SETTLEMENTS) பிரேசிலிற்குத் தேவையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 நாள் வட்டிக்கான 400 மில்லியன் டொலர்களை கொடுக்கிறதற்கு முடியாதிருப்பதாக அடம்பிடித்ததைத் தொடர்ந்து பிரேசிலின் இராணுவ ஜனாதிபதி ஆட்சிப் பொறுப்பைத் துணை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார். துணை ஜனாதிபதிக்கும் நிதியமைச்சருக்கும் இடையிலே பெரும் கருத்து மோதல்கள் உருவாகியுள்ளன. இதற்கு மத்தியிலே பிரேசிலின் ஒடுக்கப்பட்ட மக்கள் மேற்கொண்டும் தமது வாழ்வினை நடாத்த முடியாத நிலையில் அரசாங்கத்திற்கும் அதன் எஜமானன அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் இறங்கியுள்ளனர்.

சிலியில் இராணுவ ஆட்சிக்கெதிராக பரவலான ஆர்ப்பாட்டங்கள், பல்கலைக்கழக மாணவரது போராட்டங்கள் இரண்டாவது மாதமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. நிக்கரகுவாவின் எதிர்ப்புரட்சியாளரும் பிற்போக்கு அரசியல்வாதியுமான தளபதி ஸீரோ (comander Zero)வின் கெரில்லாக்களான மாதாந்த செலவான 2 தொடக்கம் 3 இலட்சம் டாலர்கட்கிடைப்பட்ட தொகையை தம்மால் வழங்க முடியாதிருப்பதாக றீகன் நிர்வாகம் அறிவித்ததைத் தொடர்ந்து தளபதி ஸீரோ தோழர்களுக்கு நிக்கரகுவாவிற்கெதிராக ஆயுதம் ஏந்த முடியாது என்று அறிவித்துவிட்டார். ஆங்காங்கு பிற்போக்குச் சக்திகளை அணி திரட்டி அவர்களை ஆயுதபாணியாக்கி தமது சார்பிலே பலவந்தமாக்கிவரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது செயலை இப்போது முடுக்கிவிட்டுள்ளது.

தத்தமது நாட்டுப் பொருளாதாரங்களைக் காப்பாற்றுவதென்பது மற்றைய நாட்டைச் சுரண்டுவதன் மூலமே சாத்தியமாகும் எனும் நிலைப்பாட்டினால் உலக ஏகாதிபத்தியம் தோற்றுவித்த சுரண்டும் அமைப்பான சர்வதேச நாணய சபை (I.M.F) இலங்கையில் ஜெயவர்த்தன அரசாங்கத்தை மேலும் ரூபாவை 4.8% ஆல் பெறுமதியிறக்கம் செய்யுமாறு நிர்ப்பந்தித்தது. இதனை அரசு ஏற்கமறுக்கும் பட்சத்தில் 250 மில்லியன் டாலர் கடனை தான் இலங்கைக்கு வழங்கப் போவதில்லையென சர்வதேச நாணயசபை ஜெயவர்த்தனவை மிரட்டலை விடுத்துள்ளது. 1977 இல் ஐ.தே.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது ஒரு டொலரின் பெறுமதி 16 ரூபாவாக இருந்ததும் தற்சமய[illegible] அண்மித்து விட்டதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச நாணய சபையின் நெருக்குவாரத்தினாலே யாகும்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடி ஒருபுறமும் நாம் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்த மேலும் கடன் பட வேண்டிய நிலை ஒருபுறமும், ஏற்றுமதி வீழ்ச்சி... உற்பத்தி வீழ்ச்சி ஒருபுறமும், மந்திரிமார்களின் ஊழல்கள் மறுபுறமுமாக அரசினை நடத்தும் ஐ.தே.க. அரசாங்கம் எந்த நிலையிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் விரும்பின் இராணுவ ஆட்சிமுறையால் இடம்பெயர்க்கப் படலாம் என்பதன் படிப்பனைகளை கடந்த தசாப்தங்களில் இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, பாகிஸ்தான், வங்காள தேசம் ஆகிய நாடுகளில் நாம் கண்டு கொண்டோம். ஏற்கனவே ஜனநாயகப் போர்வையில் ஆயுதமேந்திய ஆட்சியை மக்கள் முன் நிறுத்தி மக்களின் அடிப்படை சுதந்திரங்களையும் ஏப்பமிட்டு வருகின்றன ஐ.தே.க அரசும் அதன் எஜமானான அமெரிக்க ஏகாதிபத்தியமும்.

இந்நிலையிலே அடக்குமுறைக்கெதிராக மக்கள் திரளாமல் இருப்பதற்காக, முன்னர் 1971 இல் நடைபெற்றது போன்ற ஓர் புதிய புரட்சி நடைபெறாமல் இருப்பதற்காக, மக்களை பிரித்தாளும் சூழ்ச்சியில் ஜெயவர்த்தன அரசாங்கம் முனைந்து அதில் பாரிய வெற்றியும் பெற்றுவிட்டது. பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக இனவாதத்தைத் தூவி தமிழ் மக்களை அடக்கி... ஒடுக்கி... வெட்டி... கொன்று... பிரித்தாளும் தீயினில் தான் குளிர்காய அரசாங்கம் முயன்ற சம்பவங்களே எமது நாட்டில் இனக்கலவரங்களாக வந்து போயின... இன்று நின்று நிலைக்கிறது. 1983ஆம் ஆண்டு மே - 18 இல் தொடங்கிய அரசபயங்கரவாதமும், பேரினவாதத் தாக்குதல்களும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்களைப் பறித்து லட்சக்கணக்கானவர்களை வீடற்றவராக்கிவிட்டது. ஏற்கனவே நாளாந்த உணவுக்கே போராடுகின்ற ஏழைத் தொழிலாளர்கள் அகதிகள் முகாம்களில் வாடுகின்றனர்.

கொழும்பில் கதிரேசன் மண்டபத்திலுள்ள முகாமில் மட்டும் 7,000 தமிழர்களுக்கும் அவர்களை போல இதர முகாம்களில் அடைபட்டிருந்த அனைத்து தமிழ்மக்களுக்கும் உணவோ, நீரோ மருந்தோ அன்றி [illegible] வசதிகளோ இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அரசபயங்கரவாதம் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்களைப் பலிவாங்கிவிட்டது. மிகச் சாதுரியமாகத் திட்டமிட்டு 56 தமிழீழ விடுதலைப் போராளிகளை வெலிக்கடைச் சிறையினுள் வைத்தே அரசு படுகொலை செய்தது. இவர்களுள் காந்தீயத் தலைவர் டாக்டர் இராஜசுந்தரத்துடன் தமிழீழ விடுதலை இயக்கப் போராளிகளான குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகியோரும் அடங்குவர்.

இன்றுவரை தொடர்ந்து செல்லும் அரச அட்டூழியத்தில் இன்னும் கோரங்களுக்கான சேதங்கள் ஏற்படத்தான் போகின்றன. தமிழ் மக்கள் மத்தியில் த.வி.கூட்டணியின் மிகப் பிற்போக்குத்தனமான போக்கினால் இன்று சரியான நேரான தலைமை உருவாகவில்லை. இதன் காரணமாகவே தமிழ் ஈழம் இரத்தத்தால் கழுவப் படும், அதன் கீதம் தியாகத்தால் பாடப்படும் கூட. இன்றைய அழிவிலிருந்து நம்மைப் பாதுகாக்க இந்திரா காந்தி அம்மையார் தயங்குகிறார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்துமகா சமுத்திரத்தின் சமாதானத்திற்கும், மூன்றாம் உலக நாடுகளின் நல்வாழ்விற்கும் முனைந்துவரும் அன்னை இந்திரா உலக ஏகாதிபத்தியத்தின் சதிகளை அங்கேயும், ஆணிவேராக கற்றுத் தெளிந்தவர் ஆவார். கடந்த யூன் மாதம் பெல்கிரேட்டில் நடைபெற்ற அங்டாட் (UNCTAD) மாநாட்டில் அவர் ஆற்றிய உரை உலகளாவிய வகையில் அவரது அரசியல் விவேகத்தையும், மனிதாபிமானத்தையும் தெளிவாக்கியது. கிழக்குப் பாகிஸ்தான் (வங்காள தேசம்) போராட்டத்தில் தமது சக்தியை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக நிலைநிறுத்திய இந்திராவின் அரவணைப்பை தமிழ்மக்கள் பெற்றுக் கொள்ளத் தவறியது த.வி.கூட்டணியாரும் படு பிற்போக்கான தலைமையினாலேயே. தமிழ் மக்கள் இன்றைய நிலையில் தம்மைப் பாதுகாக்கச் சக்தியற்று நின்றாலும் கூட வருங்காலத்தில் தமது இலக்கை வென்றிட ஓர் புரட்சி இயக்கத்தை நிர்மாணிப்பதும் அது திருமதி காந்தி போன்ற அரசியல் விவேகிகளினது தொடர்ச்சியான கலந்துரையாடலும் தீர்க்கமான முன்னேற்றமும் பரிணாமம் அடைவதும்தான் இன்றைய எதிர்ப்புக்களும்... எதிர்ப்புக்களும்... அவலங்களும் நமக்குக் கற்றுத் தந்துள்ள பாடங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இவர்கள் இன்று எங்கே...?



Government troops round up Tamil insurgents in an intensifying campaign against them

ஆக்கிரமிப்பு சிறிலங்கா அரசபடையினரால் இப்படி இழுத்துச் செல்லப்பட்ட தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை பல நூறு. இத்தனைபேருமே இவர்களுக்கு இழைக்கப்பட்டது கொடும் சித்திரவதைகள். ஆனால் இன்று... பூட்டிய சிறையினிலே கைதிகள்... பொலிசாரால் தான் தீட்டிய திட்டத்தின்படி விடுதலை விரும்பிகளை... தமிழினத்தின் விலைமதிப்பில்லா செல்வங்களை வெட்டிச் சாய்த்து விட்டது சிறிலங்கா அரசாங்கம். இன்று இவர்களில் உயிருடன் இருப்பது எத்தனைபேர் என்று கூட யாருக்கும் தெரியாது.

எம் தமிழின வரலாற்றில் இது இருண்ட பக்கம் தான்... அவலச் சூழல்தான். ஆனால் நாளை, ஒடுக்கப்படும் எம் இனம் வெகுண்டெழுந்துக் கிளம்பும் போது..... நடக்கப் போவது என்ன என்பதை விரைவில் காலம் காட்டும்.




வெளியீடு

தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org